



# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

**Online Newspaper in Tamil** **Vol.10** **20.08.2011**


தேனீ இணைய
10வது வருட
22.02 2002- 22.02.201

முதற்பக்கம்

அதிரடி
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
கவிமலர்
தாயகம்
புளொட்
தூ
நெருப்பு
டெலோ நியூஸ்
பி.ஈ.ஓ.ரி.சுவிஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
அறிவுடன்
கிருத்தியம் பெண்ணியம்
புதியபாதை
அலை
பூர்வீகம்
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
ரீவடை
இணையம்
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே யாழ
ுமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்

Asientribune
Lines-Magahzine
The lka academic
Tamil Week sldf
Uthr

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (10)

### 10. மூன்று 'கப்' தண்ணீரில் முகம் கழுவினேன்!



எனக்குப் படுப்பதற்கு ஒரு பாய் தரப்பட்டதாயினும், நான் படுத்துத் தூங்கவில்லை. நேற்று மாலை கைதுசெய்யப்பட்ட நேரத்திலிருந்து ஏற்பட்ட அலைச்சல், மன உளைச்சல், குடும்பத்தைப் பற்றிய கவலை, அடுத்து என்ன நடைபெறப்போகின்றது என்ற திகில் என்பன காரணமாக, அமைதியின்றி விளித்தபடியே படுத்திருந்தேன்.

நேரம் விடிகாலை ஆகிவிட்டபடியால், புள்ளினங்களின் சுதந்திரமான ஆரவாரங்கள் மட்டுமின்றி, சுதந்திரத்தை இழந்த மனிதர்களின் மெல்லிய அரவங்களும் கேட்கத் தொடங்கின. கதிரவனின் ஒளிக்கதிர்களின் முன்னே சிறைவாசலில் எரிந்து கொண்டிருந்த கைவிளக்கு, தனது ஒளியை மெல்ல மெல்ல இழந்து கொண்டிருந்தது. கண்மூடாது ஏ.கே.47 துப்பாக்கியுடன் எனக்கு (தமக்கு?) காவல் இருந்த வாயில் காப்போன், எனக்கு அருகில் வந்து, வெளிச்சத்தில் என்னை ஒருமுறை முறைத்துப் பார்த்துவிட்டு நகர்ந்து நின்று கொண்டான்.

உதயத்தின் வெளுப்பில், சிறைக் கதவுகளுக்குள் அடைக்கப்பட்டிருந்த மனிதர்களை இப்பொழுது என்னால் பார்க்க முடிந்தது. பலர் இங்குமங்குமாக நடமாடுவது தெரிந்தது. அவர்களில் சிலர் தெத்தித் தெத்தி நடந்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் சொல்லி வைத்தாற்போல் சிவப்பு நிறத்தில் மஞ்சள் பூக்களிட்ட சாரங்களை அணிந்திருந்தனர். இது புலிகள் தமது சிறைக் கைதிகளுக்கு வழங்கும் சீருடை போலும்.

நான் சேர்த்து வைத்திருந்த எனது புத்தகத் தொகுதியில், ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் வதை முகாம்கள் பற்றிய சில நூல்களும் வைத்திருந்தேன். அதில் ஹிட்லர் தனது சிறைக்கைதிகளுக்கு வெள;வேறு நிறங்களில் உடைகளை வழங்கியிருந்தது தெரிய வந்தது. கம்யூனிஸ்ட்டுகள், யூதர்கள், ஜனநாயகவாதிகள், பொதுமக்கள் என, ஹிட்லரின் 'கெஸ்டாபோ' உளவுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, அவர்களது வதை முகாம்களில் வைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கு, அவர்களை அடையாளம் காண்பதற்காக வெள;வேறு நிறங்களிலான உடைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் எமது சர்வாதிகாரி பிரபாகரனின் கைதிகளுக்கு ஒரே மாதிரியான உடைகள் வழங்கப்பட்டு 'சமத்துவம்' நிலைநாட்டப்பட்டிருந்தது.

சிறைக் கம்பிகளுக்கு உள்ளே இருந்த சிலர், வாயிற் காப்போனுக்குத் தெரியாமல் முன்னால் வந்து நின்று, என்னை நோட்டம் விட்டுவிட்டுச் சென்றதை அவதானித்தேன். உள்ளே இருட்டாக இருந்ததால் என்னால் அவர்களை தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

சிறிது நேரத்தில் ஒரு புலி உறுப்பினன் என்னருகில் வந்து, "ஐயா வாங்கோ, முகத்தைக் கழுவிக்கொண்டு வாருங்கோ" என்றான். நான் எழுந்து அவன் பின்னால் சென்றேன்.

பெரும் சாவிக்கொத்தொன்றுடன் வந்த அவன், உயரமான சிறைக் கதவுகளில் தொங்கிக் கொண்டிருந்த சுமார் ஆறு வரையிலான பூட்டுகளை ஒவ்வொன்றாகத் திறக்க ஆரம்பித்தான். அவனுக்கு உதவியாக வாயிற் காப்போன் துப்பாக்கியுடன் நின்றான்.

கதவு திறந்ததும் என்னை வேகமாக பிடித்து உள்ளே தள்ளிய அவன், வேகம் வேகமாகக் கதவைப் பூட்டிக் கொண்டான். பின்னர் உள்ளே இருந்தவர்களை நோக்கி, "வாறவருக்கு முகம் கழுவ தண்ணி குடுங்கோடா" என்று சொல்லி விட்டு, "ஐயா கெதியா முகத்தைக் கழுவிக்கொண்டு வாங்கோ" எனச் சத்தமிட்டுக் கூறினான்.

நான் உள்ளே சென்றதும், பலரும் என்னருகில் வந்து என்னை உற்றுப் பார்த்தனர். சிலர் தமக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டனர். எனக்கு அவர்களில் ஒருவரையும் தெரிந்திருக்கவில்லை. திரும்பிப் பார்த்த போது, பாதுகாவலர்கள் இருவரும் சிறைக்குள்ளே என்ன நடக்கிறது எனக் கவனமாக நோட்டமிட்டவாறு, எனக்காக காத்து நிற்பது தெரிந்தது. இதை அறிந்தோ என்னவோ, அங்கிருந்தவர்கள் யாரும் என்னுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

நான் உள்ளே சென்ற நேரம், அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 75 பேர் வரையிலான கைதிகள், காலைக் கடன்களைக் கழிப்பதற்காக முண்டியடித்துக் கொண்டு நின்றனா. சுமார் ஒரு முழம் அளவு உயரம் மட்டுமே சுவர் மறைப்பு செய்யப்பட்டிருந்த மல சல கூடத்தில், ஒருவர் பலர் முன்னிலையில் மலம் கழித்துக் கொண்டிருக்க, மற்றவர்கள் தமக்கு கிடைக்கும் ஒன்று அல்லது இரண்டு தேநீர் குவளைகள் அளவிலான தண்ணீரில், பல் விளக்காமல் (பல் விளக்குவதற்குத் தேவையான எதுவும் அங்கு இல்லை) முகத்தை மட்டும்; 'கழுவிக்' கொண்டிருந்தனர்.

நான் அன்று அங்கு 'விசேட அதிதியாக' அனுப்பப்பட்டிருந்த படியினால், எனக்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் மூன்று 'கப்' தண்ணீர் 'தாராள மனதுடன்' வழங்கப்பட்டது.

அருகில் ஒருவர் மலம் கழித்துக் கொண்டிருக்க, பலர் நிரையில் காத்திருக்க, அவசரம் அவசரமாக நான் அந்தத் தண்ணீரால் முகத்தை பெயருக்கு கழுவிக் கொண்டேன். துடைப்பதற்கு துவாய் எதுவுமில்லை. அங்கிருந்தவர்கள் எப்படித் துடைத்துக் கொள்கிறாhகள் என்று பார்த்த போது, அவர்களும் துவாய் எதுவுமில்லாமல் தாம் கட்டியிருந்த சாரங்களினால் முகத்தைத் துடைத்துக் கொண்டதை அவதானித்தேன். ஓ எனக்கு இது ஒரு புது அனுபவம், ஆனால் அங்கிருந்தவர்களுக்கு இது எல்லாம் பழகிவிட்டது போலும்!

'தமிழன் இல்லாத நாடில்லை, ஆனால் தமிழனுக்கென்றோர் நாடில்லை' என்றும், 'ஆண்ட தமிழினம் மீண்டும் ஆள நினைப்பதில் தவறென்ன?' என்றும், தர்க்க ரீதியாகவும், வீராவேசமாகவும், உணர்ச்சி வெளிப்பாட்டுடனும், 'வீரபாண்டிய கட்டப் பொம்மன்' படத்தில் சிவாஜி கணேசன் வசனம் பேசுவது போலப் பேசி, 'தமிழீழ தனியரசு' அமைக்கப் புறப்பட்ட எமது 'மறத்தமிழர்களின்' சிறைக்கூடம், இப்படி சகிக்க முடியாமல் நாற்றமெடுப்பதை, எந்த செங்கோல் மன்னனிடம், எந்த ஆராய்ச்சி மணியை அடித்து முறையிடுவது என எனது மண்டையைப் பிய்த்துக் கொண்டேன்.

நான் எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக எனது 'காலைக் கடன்களை' முடித்துக் கொண்டு வெளியே வந்ததும், காவலுக்கு நின்ற துப்பாக்கிப் பிசாசுகளின் முகத்தில் ஒரு திருப்தி நிலவியதை அவதானித்தேன். அதாவது 'நீ நல்ல, கீழ்ப்படிவுள்ள பிள்ளை' என்பது போன்ற ஒரு அங்கீகாரம்.

பழையபடி எனக்குத் தந்த பாயில் போய் அமர்ந்து கொண்டேன். காலையில் சூடான ஒரு வெறும் தேநீராவது குடித்து, தமது அன்றாட வாழ்க்கையை ஆரம்பிப்பது, இலங்கையர்கள் எல்லோரதும் வழமை. அதனால் தான், 'In Sri Lanka, any time is Tea time'(இலங்கையில் எந்த நேரமும் தேநீர் நேரம்தான்) என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வதுண்டு. ஏன் இது உலக மக்களின் வழமை என்றுகூடச் சொல்லலாம். (மேற்கு நாடுகளில் தேநீருக்குப் பதிலாக கோப்பி) நான் அந்த வேளைக்காக ஆவலுடன்






டன் தொலைக்காட்சி தொடர்புகட்கு

தேனீ இணையத்தளத்தி தோழர் மணியம் தொட எழுதும் புலிகளின் வதைமுகாம் அனுபவங்

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுது அனுபவத்தொடர்

யாழ்ப்பாணத்தில் சாதி அரசியல் செயற்படும் முறை

அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (1 )

அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (2

காத்திருந்தேன். இந்த நேரத்தில் ஒரு சூடான தேநீர் நெஞ்சுக்குழிக்குள் இறங்குமானால், அது எவ்வளவு மகத்தான விடயமாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன்.

ஆனால் காத்துக் காத்து இருந்தும், அந்தக் 'கறுப்புத் தங்க'த்தின் சாறு எனக்குக் கடைசி வரை கிடைக்கவே இல்லை. வயிறு புகைச்சல் எடுத்தது. நேற்று மதியத்துக்குப் பின்னர், சில மிடறு தண்ணீர் மட்டுமே என் வயிற்றுக்குள் சென்றிருந்தது நினைவுக்கு வந்தது. நேரமோ காலை ஒன்பது மணி ஆகிவிட்டிருந்தது.

சிறிது நேரத்தில், ஒரு பெரிய அலுமினியக் கிடாரத்தை ஒரு தடியில் காவிக்கொண்டு, இரண்டு பேர் சிறை வாசலுக்கு வந்து சேர்ந்தனர். சிறைக்கதவு துப்பாக்கி மனிதர்களின் பாதுகாவலுடன் திறக்கப்பட்டதும், உள்ளேயிருந்து இரண்டு பேர் இரண்டு பிளாஸ்டிக் வாளிகளுடன் வாசலுக்கு வந்து, ஒரு சாப்பாட்டுக் கோப்பையினால் அதற்குள் இருந்த ஏதொவொரு உணவை எடுத்தது, தாம் கொண்டு வந்திருந்த வாளிகளுக்குள் போட்டு நிறைத்தனர். மீண்டும் சிறைக் கதவுகள் மூடிக் கொண்டன.

அதன் பின் ஒரு பிளாஸ்டிக் சாப்பாட்டுக் கோப்பையில் சிறிதளவு வெறும் வெள்ளைச் சோறு போடப்பட்டு, சிறைச்சாலையின் கம்பிக் கதவுகளுக்கூடாக எனக்கு நீட்டப்பட்டது. அதனுடன் ஒரு பிளாஸ்டிக் கப்பில் தண்ணீரும் வைக்கப்பட்டது. நான் தயங்கி நிற்கையில் "உங்களுக்குத்தான் சாப்பாடு" என, வாயிற் காப்போன் என்னைப் பார்த்துக் கூறினான். நான் எனது முதலாவது சிறைச்சாலை உணவை வாங்கிக் கொண்டேன்.

காவலாளி என்னையே பார்த்துக்கொண்டு நின்றதால், அந்த உணவில் ஒரு கவளத்தை எடுத்து வாயில் வைத்தேன். அப்பொழுதுதான் தெரிந்தது, அது சீனி போட்டு, சீனத்து வெள்ளைப் பச்சையரிசியில் பொங்கப்பட்ட வெண் பொங்கல் என்பது. எனக்கு சர்க்கரை வியாதி எதுவும் இல்லாதிருந்த போதிலும், பொதுவாக சிறு வயதிலிருந்தே, இனிப்பு என்றால் எனக்கு அலர்ஜி. ஆனாலும் வேறு வழியில்லை.

எனக்கு அருகில் காவலுக்கு நின்றவன் என்னை நோக்கி, "கெதியாய் சாப்பிட்டிட்டு றெடியா இருங்கோ, காந்தி அண்ணை உங்களுக்காகக் காவலிருக்கிறார்" என்று கூறினான். நான் ஒருவாறு அந்த 'உணவை' விழுங்கி முடித்தேன்.

'காந்தி என்னைச் சந்திக்கக் காத்திருக்கிறாராம்! இந்திய சுதந்திரத்தின் தந்தை என வர்ணிக்கப்படும், மகாத்மா காந்தி அல்லது மோகன்தாஸ் காந்தியைப் பற்றி சாதகமாகவும், பாதகமாகவும் எழுதப்பட்ட ஏராளமான நூல்களை, இதற்கு முன் நான் வாசித்திருக்கிறேன். 'ஈழத்துக் காந்தி' என தமிழரசுக் கட்சியினரால் வர்ணிக்கப்படும், 'காற்சட்டை காந்தி'யான (இந்தியக் காந்தி இடுப்பில் ஒரு துண்டுத் துணியுடன் மட்டுமே வலம் வந்ததால், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று கேலி செய்யப்பட்டவர்) எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தையும் நான் பார்த்திருக்கிறேன். இவர்களில் இப்பொழுது நான் சந்திக்கப்போகும் காந்தி எந்த வகையைச் சேர்ந்தவர்?

நான் சந்திக்கப் போகும் காந்தி, இந்தியக் காந்தி போல பொக்குவாய் சிரிப்புடன் இருப்பாரா அல்லது ஈழத்துக் காந்தி செல்வநாயகம் போல கோட் சூட்டுடன் இருப்பாரா? இவர் எந்த ரகம்? எந்த ரகமாக இருந்தாலும் பரவாயில்லை. காந்தி என்ற சொல்லே, அகிம்சையின் இன்னொரு வார்த்தையாக இருப்பதால், மனதில் சிறிது தென்பு பிறந்தது. சில வேளைகளில் நான் செய்த 'குற்றங்களுக்காக' இவர் என்னை அடிக்க நேர்ந்தாலும், தடிகளோ ஆயுதங்களோ கொண்டு அடிக்காமல், மகாத்மா காந்தி எழுதிய, அவரது சுயசரிதை நூலான, 'சத்திய சோதனை' புத்தகத்தால் மெதுவாக இரண்டு தட்டு தட்டுவார் என்று எண்ணிக் கொண்டு, அவரது அழைப்புக்காகக் காத்திருந்தேன்.

தொடரும்

முன்னைய பதிவுகள்